**தேசிய வடிவமைப்பு நிலையம் - 2023**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் (''நிலையம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளடங்கலான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிலையத்தின் நிதிக்கூற்றுகளின் ஊடாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பரீட்சிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிலையத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிலையத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்ககள்

### 1.5.1 பெற வேண்டிய தொகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒழுக்காற்று கட்டளையின் மீது 2021 ஆண்டில் பணி நீக்கம் செய்யப்பட்ட அலுவலர் ஒருவரிடமிருந்து ரூபா 168,485 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | தொழில் நியாய சபையில் முறைப்பாடு செய்யப்படுவதால் இந்த நிலுவை மீதியை இது வரை செலுத்தவில்லையென. | பெறவேண்டிய தொகையை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1982 இன் 35 இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் இணைந்த நிறுவனங்கள் சட்டத்தின் 82(ஐ) பிரிவு | இரசாயனகூட, வேலைத் தளதங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களை நடாத்திச் செல்ல இடமளித்திருந்த போதும் தனியான ஆய்வு நிறுவனமாக வடிவமைப்பு ஆய்வு நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் அதன் கல்விப் பிரிவினால் | ஆய்வு நிறுவனத்தை தனியான நிறுவனமாக பதிவு செய்திருக்காததுடன் இதற்காக ஆரம்ப கலந்துரையாடல் நடாத்தப்பட்டு உப குழுவொன்று நியமிக்கப்பட்டு தேவையான | சட்டத்தின் பிரகாரம் ஆய்வு நிறுவனத்தை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாடநெறிகளை நடாத்தி இலாபம் ஈட்டியிருந்தது. | முன்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதெென. | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகம் செய்துள்ள அரச முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தி | வரைவு வருடாந்த ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2024 மே 10 திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது. | ஆளணியினர் பற்றாக்குறை மற்றும் பண்டக கணிப்பீட்டை பூர்த்தி செய்ய கால தாமதமாகியமை தாமதத்திற்கு தாக்கம் செலுத்தியதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் இந்த குறைபாட்டை நிவர்த்தித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதெென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | 2009 ஏப்ரல் 16 திகதி இலக்கம் 9/2009 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 2(IV) பிரிவு மற்றும் 2013 ஒக்டோபர் 07 திகதிய இலக்கம் 21/2013 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் (அ) பிரிவு | 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வரவு மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்திக் கொள்ளாது 13 அலுவலர்களிற்கு கூட்டுத் தொகை ரூபா 1,081,245 ஆன மேலதி நேரம் மற்றும் விடுமுறை படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | விரல் அடையாள இயந்திரத்திரமொன்று இல்லாதனால் வரவு, வெளிச் செல்லலை குறிப்பிடப்பட்டில்லை. தற்போது ஆய்வு பிரிவின் நடவடிக்கைகளுக்காக ஆளணி அலுவலர்களின் வருகையின் போது விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதெென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் வருகை, வெளிச் செல்லலை குறிப்பிடுவதற்கு விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,739,450 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,751,598 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,987,852 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. திறைசேரி மானியம் ரூபா 20,513,444 இனால் அதிகரித்திருந்த போதும் அபிவிருத்தி செலவினம் ரூபா 16,787,126 இனால மற்றும் பெருமான தேய்வு ஏற்பாடு ரூபா 6,214,788 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான அலுவலகத்தில் CCTV கெமரா தொகுதி 2022 சனவரி மாதத்தில் செயலற்று இருந்த போதும் கணக்காய்வு திகதியான 2024 ஜுன் 02 வரையும் | பென்த்ஹவுஸ் நிறுவனம் மற்றும் உப ஒப்பந்ததாரரிற்கு இடையே நிலவிய பிரச்சினை காரணமாக திருத்தம் செய்யப்படாததால் நிறுத்தி | கெமரா தொகுதியை விரைவில் செயற்படு நிலைக்கு |

| | | |
|---|---|---|
| மீண்டும் சீராக்கியிருக்காததுடன் வழங்குனர்களிற்கு செலுத்த வேண்டிய தொகையை நிறுத்தி வைத்தலாக நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் ரூபா 1,886,005 தொகை முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | வைத்தல் தொகையினால் வெளி நிறுவனமொன்றின் ஊடாக CCTV தொகுதியின் திருத்த வேலைகளை மேற்கொள்ள அளவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு முன்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதென. | கொண்டுவர வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதிய நிர்மாணம் மற்றும் புதிய தொழிநுட்பம் தொடர்பான அறிவை வழங்கும் கருத்திட்டத்தின் கீழ் கலைஞர்களின் தேவைப்பாட்டை நிவர்த்திக்க தரமான பயிற்சியை நாடு முழுவதும் விரிவாக்கம் நோக்கில் 29 நிகழ்சித் திட்டங்களை நடாத்த ரூபா 8.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் 17 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. இதன் கீழ் நிகழ்சித் திட்டங்கள் ஊடாக கலைஞர்களிற்கு 450 புதிய நிர்மாணங்களை அறிமுகம் செய்ய திட்டமிட்டிருந்த போதும் 216 புதிய நிர்மாணங்கள் மாத்திரம் அறிமுகம் செய்யப்பட்டிருந்ததுடன் 234 நிர்மாணங்களை அறிமுகம் செய்ய முடியாதிருந்தன. | மூலதன ஏற்பாட்டின் மீது மற்றும் வடிவமைப்பு பிரிவின் வடிவமைப்பு அபிவிருத்தி அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக மேற்கொள்ள முடியவில்லை. அவ்வாறே 07 நிகழ்சித் திட்டங்களை “UNDP” நிதிய பயன்பாட்டுடன் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த போதும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைக்காததன் காரணமாக பயிற்சி நிகழ்சித் திட்டங்களில் 216 புதிய நிர்மாணங்களை மாத்திரம் அறிமுகம் செய்ய நேரிட்டது. | அனைத்து நடைமுறை சாத்திய நிலைமைகளையும் கவனத்திற் கொண்டு திட்டமிட வேண்டியதுடன் செய்யப்பட்ட திட்டமிடல்களின் பிரகாரம் பணிகளை மேற்கொள்ள வேண்டும். |

**3.3 சிக்கனமற்ற கொடுக்ல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தினுள் 05 சிரேஷ்ட வடிவமைப்பு கலைஞர்கள் மற்றும் இரண்டு உதவி வடிவமைப்பு கலைஞர்கள் இருக்கும் போது வெளி வடிவமைப்பு நிர்மாண நிறுவனமொன்றை ஈடுபடுத்தி பதிக் சட்டையொன்றிற்கு ரூபா 44,500 வீதம் 16 சட்டைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 712,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | தேசிய மட்டத்தில் வடிவமைப்பு நிர்மாண தூர நோக்கிற்காக ஆடைகளை நிர்மாணிக்கும் போது அதற்கென விஷேடமான ஆய்வு மற்றும் தொழிற் பயிற்சி தகைமையுடைய ஒருவரின் சேவை அத்தியவசியம் ஆகையால் வெளி வடிவமைப்பு உறுவாக்குனர் ஒருரின் உதவி பெறப்பட்டது. | நிறுவனத்தில் காணப்படும் வளங்களால் பிரயோசனம் எடுத்து ஆக்கர்வமாக கருத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பதிக் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கலைஞர்களிற்கு பொது | பதிக் கைத்தொழின் அன்மைக் கால எழுச்சியுடன் புதிய | குறித்த இயந்திரத்தை |

| | | | |
|---|---|---|---|
| | வசதிகளை வழங்கும் நோக்கில் ரூபா 2,991,720 செலவில் சுத்திகரிப்பு தொகுதியொன்றை 2021 திசெம்பர் 16 திகதி அமைத்திருந்த போதும் மீளாய்வாண்டிலும் அதனூடாக எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்தடன் இயந்திரம் விளைவற்று காணப்பட்டது. | வியாபாரங்களை ஆரம்பிக்க எதிர்பார்த்த பிரதேசத்தில் தொழில் முயற்சிகளிற்கு பொது வசதிகளை வழங்கும் நோக்கில் நீர் சுத்திகரிப்பு அலகொன்று அமைக்கப்பட்டது. புதிய வியாபாரங்களை ஆரம்பித்த பின்னர் இந்த சுத்திகரிப்பு அலகின் நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக இடம்பெறுமென. | பயன்படுத்தி நோக்கத்திலான பணிகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிரம்பு மற்றும் மூங்கில் தளபாட பிரிவிற்குரிய ரூபா 255,000 பெறுமதியான மூங்கில் ஸ்டீமர் இயந்திரம் 2024 ஜுன் 03 திகதியன்றும் நிலைய வளவில் விளைவற்று காணப்பட்டது. | இந்த இயந்திரம் மூங்கில மற்றும் பிரப்புகளை சூடாக்கி தேவையானவாறு வடிவு மற்றும் நிர்மாணங்களை தயாரித்துக் கொள்ள பயன்படுத்துவதுடன் தொடரந்து பயன்படுவதில்லை. தேவைப்பாட்டின் மீது மூங்கில மற்றும் பிரப்புகளை பயிற்சி நிலையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இயந்திரத்தில் உச்ச மட்டத்தில் ஆக்கபூர்வமாக பயன்படுத்த சாத்தியமான முறைமையொன்றை தயாரிக்க வேண்டும். |
| (இ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் கண்காட்சிக்காக கொள்வனவு செய்த ரூபா 621,395 பெறுமதியான பூர்த்தியடைந்த பொருட்கள், நிலைத்தில் வேலைத்தளத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 1,859,866 பெறுமதியான 736 முடிவுப் பொருட்கள் மற்றும் 2010 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை அவ்வப் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 905,686 பெறுமதியான மூலப்பொருட்கள் மற்றும் முடிவுப் பொருட்கள் 2023 திசெம்பர் 31 திகதி வரையும் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டன. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | அசையாத மூலப்பொருட்கள் மற்றும் விளைவற்ற முடிவுப் பொருட்கள் இருப்புக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த பொருத்தமான வேலைத் திட்டமொன்றை அமைக்க வேண்டும். |

**3.5 நிதியத்தின் குறைந்த பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தின் கீழ் கலைஞர்களை மேம்படுத்துவதற்காக கிடைத்த தொகையில் ரூபா 2,312,228 நோக்கைத்தை நிறைவேற்றாது நிதிக்கூற்றுக்களில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கொரோன தொற்று நிலைமை, எரிபொருள் நெருக்கடி ஆகிய காரணங்களால் நிறைவேற்ற முடியாது போனதுடன், இந்த பணிகளை மீண்டும் பூர்த்தி செய்வதற்குரிய கிராமங்களில் தற்போது கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதென. | கிடைத்துள்ள நிதியை பயன்படுத்தி எதிர்பார்த்த பணிகளை அடைந்து கொள்ள வேண்டும். |

### 3.6 கருத்திட்டங்கள் அல்லது செயற்பாடுகள் தாமதமடைதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆபத்திற்குள்ளாக முடியுமான குழுவை தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்து கொள்வதற்காக கைப்பணி பயிற்சியை வழங்க ரூபா 900,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 40 பயிற்சியாளர்களிற்கு நலன்களை பெற்றுக் கொடுக்க 2 நிகழ்சித் திட்டங்களை நடாத்த இலக்கு வைக்கப்பட்டிருந்த போதும் ஆண்டினுள் இப் பணிகளை திட்டமிட்டவாறு மேற்கொண்டிருக்கவில்லை. | வடிவமைப்பு பிரிவின் வடிவமைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக இந்த பயிற்சியை வழங்க முடியாதுள்ளதென. UNDP நிதியத்தின் ஏற்பாட்டை விடுவித்துக் கொள்ள பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்காததால் இந்த நிகழ்சித் திட்டங்களை நடாத்த முடியவில்லையென. | நிகழ்சித் திட்டங்களை திட்டமிடும் போது தாக்கம் செலுத்த முடியுமான அனைத்து காரணிகளையும் கவனத்திற் கொள்ள வேண்டியதுடன் திட்டம் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தினால் கருத்திட்ட திட்டமொன்றை தயாரித்து நேரடியாக மற்றும் மறைமுகமாக 6700 நலன்பெறுனர்களிற்கு நலன்களை வழங்கும் நோக்காக்க கொண்டிருந்த போதும் எந்தளவு கலைஞர்கள் நலன்களை பெற்றுக் கொண்டனர் என இனங்கண்டு கொள்ள மதிப்பீடொன்றை மேற்கொண்டிருக்காததால் கருத்திட்ட திட்டத்தினூடாக நோக்கம் அடையப் பெற்றுள்ளனவா என அவதானிக்க முடியவில்லை. | பதில் சமர்பிக்கப்படவில்லை. | கருத்திட்டங்கள் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் பின்னூட்டல் செயன்முறையை மேற்கொண்டு தகவல்களை நாளாதுவரையாக பேணிக் கொள்ள வேண்டும். |

### 3.7 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1(இ) பந்தி பிரகாரம் தகைமையுடைய, ஆர்வமுள்ள தரப்பினரிற்று பெறுகைகளில் பங்குகொள்ள நியாயமான, சமமான மற்றும் உச்ச சந்தர்பங்களை வழங்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் பதிக் விலாசிதா காட்சிக்காக ஆடை நிர்மாணதாரர்ளை தெரிவு செய்தல் மற்றும் டிப்ளோமா சான்றிதழ் வழங்கல் விழாவிற்குரிய பணிகள் பெறுகைகள் வழிகாட்டிக்கு மாற்றமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.3.(அ) பிரகாரம் வழங்குனர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொலைபேசி பெயர்பட்டியலின் மஞசள் பக்கம் மற்றும் வானவில் பக்கங்களில் பகிரங்க நிறுவனங்களின் மூலம் விலை மனு கோரப்பட்டுள்ளது. 2025 ஆண்டு முதல் வழங்குனர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சேவை வழங்குனர்களை தெரிவு செய்ய மற்றும் வழங்குனர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |